# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி | வரலாறு | மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 10×1=10

1) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள்
இ) A.O.ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

3) கூற்று: வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
காரணம்: இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

4) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவங்கப்பட்டது
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

5) பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக
அ) கதார் கட்சி - i) 1916
ஆ) நியூ இந்தியா - ii) 1913
இ) தன்னாட்சி இயக்கம் - iii) 1909
ஈ) மிண்டோ மார்லி சீர்திருத்தம் - iv) 1915
அ) ii, iv, i, iii ஆ) iv, i, ii, iii இ) i, iv, iii, ii ஈ) ii, iii, iv, i

6) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C.பானர்ஜி ஈ) M.G.ரானடே

7) இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 2, 1930
இ) ஜனவரி 26,1930 ஈ) ஜனவரி 26, 1931

8) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

9) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹீக்ளி

10) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

www.Padasalai.Net

பகுதி - ஆ

**II.** எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. வினா எண்.17 கட்டாய வினா. **5×2=10**

11) தேசியம் என்றால் என்ன?
12) கில்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவரி?
13) தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?
14) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னனி என்னவாக இருந்தது?
15) பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
16) இரண்டாம் லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
17) காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது எது?

பகுதி - இ

**III.** எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. வினா எண்.24 கட்டாய வினா. **5×3=15**

18) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை விவரி?
19) வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
20) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
21) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள் பற்றி விவாதிக்கவும்.
22) பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
23) தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பு குறித்து எழுதுக.
24) 1921-ல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?

பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- **3×5=15**

25) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க. (அல்லது)

ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

26) அ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் ஆகியோரின் கீழ் துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக. (அல்லது)

ஆ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்ட மறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது.

27) அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசிய வாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது. (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1. பம்பாய் 2. டெல்லி 3. தூத்துக்குடி 4. கல்கத்தா 5. மீரட்

*******

www.Padasalai.Net